Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 49 of 2025**

**Deposition of P.W.16 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கிருஷ்ணமூர்த்தி | Taluk | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of June 2026.
(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது நாமக்கல் மதுவிலக்கு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 13.05.2023ம் தேதி ராசிபுரம் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது ராசிபுரம் காவல் நிலைய குற்ற எண்.314/2023 U/s.294(b), 302 இ.த.ச வழக்கில் இறந்து போன சேட்டு என்கிற தங்கராஜ் (வயது 55) என்பவரின் பிரேதத்தை ராசிபுரம் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்காக 13.05.2023ம் தேதி வேண்டு கோள் கடிதத்தினை கொடுத்தும். பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தும், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு கொடுத்து அனுப்பியதை சேலம் அரசு மருத்துவமனை சென்று வேண்டுகோள் கடிதத்தையும், பிரேதத்தையும் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்து டோக்கன் எண்.21ன் படி பிரேதத்தை மருத்துவரிடம் அடையாளம் காட்டினேன். மதியம் சுமார் 12.20 மணி முதல் 1.20 மணி வரை பிரேத பரிசோதனை செய்து முடித்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளையும், பிரேதத்தின் மீது இருந்து உடைமைகளையும் ரசாயன பகுப்பாய்விற்காக என்னிடம் ஒப்படைத்தார்கள். பிரேதத்தை பெற்று நல்லடக்கம் செய்ய அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்து என்னிடம் ஒப்படைக்கப்பட்ட

வழக்கு சொத்துக்களை தனி அறிக்கையுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.15 ஆகும். உடல் உள்ளுறுப்புகளை 15.05.2023ம் தேதி ரசாயன பகுப்பாய்விற்காக சேலம் வட்டார தடயவியல் ஆய்வகத்தில் ஒப்பபடைத்து ஒப்பளிப்பு பெற்று நிலையத்தில் அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாரளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.